


கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.3.2026) முகாம் அலுவலகத்தில், மதுரவாயல் தெற்குப் பகுதி 150வது வட்ட கழக செயலாளர் சி. சுந்தர் அவர்களின் மகன் கௌதம் – டாக்டர் எஸ். மஞ்சு ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இம்மண விழாவில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் க. கணபதி, கழக நிர்வாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

### சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் இன்று

# தமிழ்நாடு 2030 ‘கனவுகள் மெய்ப்படும்’ நிகழ்ச்சி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகின்றது!

**சென்னை, மார்ச் 6–**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு 2030 கனவுகள் மெய்ப்படும் நிகழ்ச்சி உங்க கனவை சொல்லுங்க புதுமையான திட்டம் குறித்து சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் இன்று (6.3.2026) காலையில் பொதுமக்கள், பத்திரிகை, ஊடக வல்லுநர்கள் சான்றோர்கள் கருத்துகள் மீது கலந்துரையாடல்கள் நடைபெறுகிறது.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு அரசின் சார்பில் ‘‘**உங்க கனவ சொல்லுங்க**’’ எனும் திட்டத்தை அறிமுகப்படுத்தி தமிழ்நாடு முழுவதிலும் மக்களைச் சந்தித்து அவர்களின் எதிர்பார்ப்பை கனவை கேட்டுத்தெரிந்து பதிவு செய்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள். அதன்படி, மாநிலம் முழுவதும் 45 நாட்கள் 50,000 தன்னார்வலர்கள் 1.92 கோடி குடும்பங்களின் எதிர்காலக் கனவுகளை அறிவதற்காக, வீடுவீடாகச் சென்றனர். அப்பொழுது பொதுமக்களை நேரில் சந்தித்து, திராவிட மாடல் அரசு நடைமுறைப்படுத்தியுள்ள திட்டங்கள் குறித்தும், அவர்களின் எதிர்பார்ப்புகள், எதிர்காலக் கனவுகள் ஆகியவை குறித்தும் கேட்டு அறிந்து பதிவு செய்துள்ளனர். என் ஊர் என் கனவு என்னும் தலைப்பில் 38 மாவட்டங்களின் தொலைநோக்குத் திட்டம் 2030 குறித்துச் செய்திகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

கருப்பொருள் வல்லுனர்களின் ஆலோசனைகள்படி உங்க கனவ சொல்லுங்க தமிழ்நாடு 2030 மீது 8 துறைசார் தொலைநோக்குத் திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. 10 இலட்சம் இளைய சக்திகளின் என் கனவு என் எதிர்காலம் என்னும் நோக்கில் செய்திகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

அதேபோல வெளிநாடுகளில் வாழும் தமிழ்ச் சமுதாய மக்களின் கனவுகளையும் அறியும் நோக்கில் 70 க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த அயலகத் தமிழர்களின் கனவுகளும் திரட்டப்பட்டுள்ளன.

திராவிட மாடல் அரசின் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இத்திட்டத்தின் நிறைவாக ‘‘**கனவு மெய்ப்படும்**’’ எனும் தலைப்பில், 6.3.2026 அன்று காலை 10.30 மணி முதல் நண்பகல் 1.00 மணி வரை சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் தமிழ்நாட்டு மக்களின் கனவுகள் அனைத்தும் 2030 ஆம் ஆண்டுக்குள் நிறைவேற்றப்படும் என்பதை வெளிப்படுத்தும் வண்ணம் மாபெரும் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்தச் சிறப்பு நிகழ்வில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், அமைச்சர்கள், முக்கிய பெருமக்கள் முக்கிய நாளிதழ்களின் பதிப்பாளர்கள், தொலைக்காட்சி நிறுவன உரிமையாளர்கள், பத்திரிகை மற்றும் ஊடக நிறுவனங்களின் ஆசிரியர்கள், முக்கிய சமூக ஊடகவியலாளர்கள், தொழில்துறை வல்லுநர்கள், முக்கிய திரையுலகப் பெருமக்கள், முதன்மைக் கல்வியாளர்கள், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள், கலை, பண்பாடு, இலக்கியம் சார்ந்த ஆளுமைகள், சாதனை இளைஞர்கள், காலநிலை வாகையர்கள் ஆகியோரும் பங்கேற்று, தங்கள் கருத்துகளைப் பகிர உள்ளனர்.

இந்த மாபெரும் நிகழ்ச்சி தொகுப்பாளர் அறிமுக உரையுடன் தொடங்கி, சூப்பர் சிங்கர் ஜுனியர் குழந்தைகள் பாடும் தமிழ்த்தாய் வாழ்த்து நிகழ்ச்சியுடன். தமிழ்நிலத்தின் வெற்றிகளைப் பறைசாற்றும் நடனமும் நடைபெறுகிறது. அதனைத் தொடர்ந்து செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு.இரா. வைத்திநாதன், அவர்கள் 5 ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டுமானங்களின் காட்சித் தொகுப்புகள் குறித்து எடுத்துரைக்கிறார்கள்.

அதனைத் தொடர்ந்து சென்னைப் பெருநகர மாநகராட்சி இணை ஆணையர் திரு.வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., அவர்கள் துறை வாரியான சாதனைகள் மீது 6 அமர்வுகளில் இடம் பெறும் நிகழ்வுகள் குறித்து அறிமுகப்படுத்துகிறார்கள்.

பின்னர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் நலன் விளையாட்டு, வேலைவாய்ப்பு மற்றும் மகளிர்நலன் ஆகியன குறித்து உரையாற்றுகிறார்கள்

தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அவர்கள் தொழில்துறை நகர்ப்புர கட்டமைப்பு, பொருளாதார வளர்ச்சி, வெளிநாட்டு முதலீடுகள் குறித்தும் உரையாற்றுகிறார்.

தொடர்ந்து உழவர் நலன் வேளாண் துறை அமைச்சர் அவர்களும் பால்வளத் துறை அமைச்சர் அவர்களும் விவசாயம், கால்நடைப் பராமரிப்பு, மீன்வளம் – ஆகிய துறைகள் குறித்து உரை நிகழ்த்துகிறார்கள்.

அதன்பின் கடந்த 5 ஆண்டு திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளைப் பற்றி ராப் இசை தொகுப்புப் பாடல்கள் பாடப்படுகின்றன.

அடுத்து நிதியமைச்சர் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ஆகியோர் வனத்துறை, சுற்றுச்சூழல், பொதுசுகாதாரம், தொல்லியல், இந்து சமய அறநிலையத்துறை, தமிழ் மொழி வளர்ச்சித் துறை ஆகிய துறைகள் குறித்து உரை நிகழ்த்துகிறார்கள்.

தொடர்ந்து ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சமூகநலத்துறை அமைச்சர், ஆகியோர் ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலன், திருநங்கையர், மாற்றுத்திறனாளிகள் நலன் குறித்து உரையாற்றுகின்றனர்.

அதனைத் தொடர்ந்து பள்ளிக்கல்வித் துறை அமைச்சர், உயர்கல்வித்துறை அமைச்சர் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

தற்போது தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டுவரும் தொலைநோக்குத் நீர், மின்சாரம், சுகாதாரம், தொழில்நுட்பம் ஆகியவற்றை உள்ளடக்கிய தொலைநோக்குத் திட்டங்கள் பற்றிய ஒரு காட்சித் தொகுப்பு வெளியிடப்பபடுகிறது.

அதன் பின்னர் உங்க கனவ சொல்லுங்க திட்டம் தொடர்பாக மக்கள் கருத்துக் கேட்புப் பணி எவ்வாறு தமிழ்நாடு எங்கும் நடைபெற்றது என்பதைத் தெளிவுற விளக்கும் காட்சித் தொகுப்புகள் இடம் பெறுகின்றன.

பின்னர், கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் உங்க கனவ சொல்லுங்க திட்டத்தின் மூலம் மக்களிடம் பெற்ற தகவல்களின் தரவுகள் குறித்துக் கள அலுவலர்கள், தன்னார்வலர்கள் துணையோடு கலந்துரையாடலை நிகழ்த்துகிறார்கள்.

முதலமைச்சர் அவர்கள் ஆங்கிலத்தில் உருவாக்கப்பட்டுள்ள District Vision Document எனும் ஆவணத்தை வெளியிட்டு; தொடர்ந்து; தமிழ்நாடு 2030 பெருங்கனவைப் பறைசாற்றும் திட்டம் குறித்துச் சிறப்புரையாற்றுகிறார்கள்.

இறுதியாக தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் நன்றியுரைக்குப் பின் நாட்டுப்பண் இசைக்கப்படும்.

வரலாற்று சிறப்புமிக்க மகத்தான இந்த நிகழ்ச்சிக்கு விவசாயப் பிரதிநிகள், வியாபாரத் துறையினர், திரைத் துறையினர், முன்னாள் நீதிபதிகள், விளையாட்டு வீரர்கள், மாவட்ட ரீதியாகப் புகழ் பெற்ற பெருமக்கள், ஐடி துறையினர், புகழ்பெற்ற மருத்துவர்கள் சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்கிறார்கள்.

பொதுவாக, அரசு நடைமுறைப்படுத்தும் திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்துவது குறித்தும், செயல்படுத்தியபின் அத்திட்டத்தின் விளைவுகள் குறித்தும் ஆராய்ந்து அறிவது என்பது வழக்கமான நடைமுறையாகும். ஆனால், இந்த தமிழ்நாடு 2030 கனவுகள் மெய்ப்படும் எனும் நிகழ்ச்சி ஒரு புதுமையான நோக்கத்தைக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொலைநோக்குச் சிந்தனையுடன் பொதுமக்களின் கருத்துகளையும் எண்ணங்களையும் அறிந்து கொண்டு அவற்றிற்கு ஏற்பச் செயல்படுத்தக் கூடிய திட்டங்களை வகுத்திடும் நோக்கிலும், 2030-க்குள் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் முறைகள் குறித்தும் மக்களுக்குத் தொலைநோக்குடன் அறிவிக்கும் வகையில் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளார்கள். இந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் திராவிட மாடல் அரசு செயல்படுத்தியுள்ள திட்டங்கள் வாயிலாகப் பயனடைந்தவர்கள் தங்கள் எண்ணங்களைத் தெரிவிப்பார்கள். திட்டங்களை அறிமுகப்படுத்தி, செயல்படுத்திய அரசின் குறிக்கோள்கள், அவை அடையப் பெற்ற விவரங்கள் முறைகள் முதலிய கருத்துகளைத் தெரிவிப்பதற்காகச் சிறப்பு அழைப்பாளர்கள் பங்குபெறுகிறார்கள். இந்த நிகழ்ச்சியின் மூலம் பொதுமக்களின் கனவுகள் நிறைவேற்றப்படுவதற்கான வழிமுறைகள் தெளிவுபடுத்தப்படும் வாய்ப்பு அமைகிறது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 4.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் எழுத்தாளர் முனைவர் ஆ.இரா.வேங்கடாசலபதி அவர்களுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் உயர் வருவாய் குடியிருப்புக்கான ஆவணங்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஔவை அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ரூ.6 கோடி மதிப்பீட்டில் மதுரையில் ஒலிம்பிக் அகாடமி!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!





**மதுரை, மார்ச் 6–**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரை மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மதுரை ஒலிம்பிக் அகாடமியை திறந்து வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விளையாட்டுத் துறையில் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்கி வருகின்றார். விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவீத இட ஒதுக்கீடு அளித்து பல்வேறு அரசுத்துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணி நியமனம் செய்து வருகின்றார்.

தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித்தொகை (Elite) வழங்கும் திட்டத்தின்கீழ் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஊக்கத் தொகை 25 இலட்சம் ரூபாயை 30 இலட்சம் ரூபாயாக உயர்த்தியதோடு இத்திட்டத்தில் பயன் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையை முதலமைச்சர் அமைச்சர் அவர்கள் 12 லிருந்து 50 ஆக உயர்த்தியுள்ளார்.

மேலும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் பெறுவதற்கான ஊக்குவிப்பு (MIMS) வழங்கும் திட்டத்தின் கீழ் உள்ள விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டு வந்து நிதியுதவியை 10 இலட்சம் ரூபாயிலிருந்து இருந்து 12 இலட்சம் ரூபாயாக உயர்த்தியதோடு, பயன்பெறும் விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கையை 125 ஆக உயர்த்தியுள்ளார்.

அதேபோல் சாம்பியன் டெவலப்மெண்ட் திட்டத்தின் (CDS) கீழ் பயன்பெறும் வயதிற்குட்பட்டோர் பிரிவு விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கையை 100 லிருந்து 200 ஆக உயர்த்தியுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் விளையாட்டு வீரர்கள் சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்ளவும், வெளிநாடுகளுக்கு சென்று பயிற்சி பெறவும், அதிநவீன உயர்தர விளையாட்டு உபகரணங்களை வாங்கவும், தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையை உருவாக்கி நிதியுதவி அளித்து வருகின்றார். மேலும், சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையை வழங்கி வருகின்றார்.

மேலும் தமிழ்நாட்டின் விளையாட்டு வீரர்கள் சர்வதேச போட்டிகளில் பங்கேற்க பயிற்சி பெறும் வகையில் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்ட விளையாட்டு வளாகங்களிலும் சர்வதேச தரத்திலான உடற்பயிற்சி கூடங்கள், உள்ளரங்க மைதானங்கள், பார்வையாளர் கூடங்கள், அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம், உள்ளரங்க வாலிபால், கூடைப்பந்து, மைதானங்கள், கபடி குத்துச்சண்டை மைதானங்கள், சர்வதேச தரத்திலான நீச்சல் குளங்கள், ஹாக்கி மைதானங்கள் என நவீன விளையாட்டு கட்டமைப்புகளை உருவாக்கி வருகின்றார்.

மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கு தனியாக விளையாட்டு மைதானங்களை நிறுவி வருகின்றார். இதன் காரணமாக கடந்த 5 ஆண்டுகளில் நூற்றுக்கணக்கான விளையாட்டு வீரர்கள், மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் சர்வதேச போட்டிகளில் பதக்கங்கள் வென்று தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் மதுரை மாவட்டத்தில் உயர்திறன் வாய்ந்த விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் பதக்க மேடையை அடைவதற்கு தேவையான அனைத்து வசதிகளும் கொண்ட ஒலிம்பிக் அகாடமி அமைக்கப்படும் என அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மதுரை மாவட்ட விளையாட்டு வளாகத்தில் கபடி மற்றும் டேபிள் டென்னிஸ் விளையாட்டினை ஊக்குவிக்கும் வகையில் தரை தளத்தில் ஒரு கபடி ஆடுகளம், முதல் தளத்தில் 6 எண்ணிக்கை கொண்ட டேபிள் டென்னிஸ் ஆடுகளம் கொண்ட 250 இருக்கைகளுடன் கூடிய உள்விளையாட்டரங்கம் மற்றும் ஆண், பெண் உடைமாற்றும் அறைகள் கொண்ட வசதியுடன் ஒலிம்பிக் அகாடமி அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒலிம்பிக் அகாடமியில் நவீன வசதிகளுடன் கொண்ட புதிய உடற்பயிற்சி கூடம் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது உள்ள திறந்தவெளி கூடைப்பந்து ஆடுகளம் செயற்கை தரையமைப்பு ஆடுகளமாகவும், தற்போது உள்ள மூன்று திறந்தவெளி டென்னிஸ் ஆடுகளங்கள் செயற்கை தரையமைப்பு கூடிய புதிய டென்னிஸ் ஆடுகளங்களாகவும் மாற்றியமைக்கப்பட்டு உள்ளது.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.3.2026) மதுரை மாவட்ட விளையாட்டு வளாகத்தில் மொத்தம் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கபடி ஆடுகளம், 6 எண்ணிக்கை கொண்ட டேபிள் டென்னிஸ் ஆடுகளங்கள் கொண்ட மதுரை ஒலிம்பிக் அகாடமி, செயற்கை தரையமைப்பு கொண்டதாக மேம்படுத்தப்பட்ட 3 டென்னிஸ் மைதானங்கள், 2 கூடைப்பந்து மைதானங்களை திறந்து வைத்து பார்வையிட்டு, விளையாட்டு வீரர்களுடன் கலந்துரையாடினார்.

இந்நிகழ்ச்சியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி, தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, ஆ.வெங்கடேசன், மு.பூமிநாதன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், மாநகராட்சி ஆணையாளர் திருமதி சித்ரா விஜயன், உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.



சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் எழும்பூர் தெற்கு பகுதியில் மனிதநேயம் – 32 வெல்லும் தமிழ் பெண்கள்! எனும் தலைப்பில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் சரிதா மகேஷ் குமார் எம்.சி., தலைமையில் கல்லூரி மாணவர்களுக்கான மாபெரும் பேச்சுப்போட்டி நடைபெற்றது. இதில் வெற்றி பெற்றவர்களுக்கு முதல் பரிசாக 1,00,000 இரண்டாம் பரிசாக 75000, மூன்றாம் பரிசாக 50,000 நான்காம் ஐந்தாம் பரிசாக ரூபாய் 25000 வழங்கப்பட்டது. இதில் மேனாள் நீதியரசர்கள் எஸ்.விமலா, பவானி சுப்பராயன், ஆர்.என்.மஞ்சுளா ஆகியோர் நடுவர்களாக திரைக்கலைஞர் அம்பிகா, ஜல்லிக்கட்டு புகழ் ஜுலி,கானா இசைவாணி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்ற சிறப்பித்தனர். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



பல்லாவரம் சட்டமன்ற தொகுதி 36வது வார்டில் ரூபாய் 15 லட்சம் மதிப்பீட்டில் இ கருணாநிதி எம்.எல்.ஏ. தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புருஷோத்தம நகர் விஜய கணபதி லட்சுமி நாராயண பெருமாள் திருக்கோயில் முகப்பில் பக்தர்கள் நிழற்குடை பயன்பாட்டிற்கு திறந்து வைத்து அங்கு வருகை தந்தோருக்கு நினைவுப் பரிசை வழங்கினார். உடன் மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, பகுதி கழகச் செயலாளர் ஏ.கே. கருணாகரன், மாமன்ற உறுப்பினர் சரஸ்வதி சந்திரசேகர் வட்டக் கழகச் செயலாளர் ஜே. வி. சந்திரசேகர் கழக நிர்வாகிகள் திருக்கோயில் பொது நலச் சங்க நிர்வாகிகள் பொதுமக்கள் பக்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.